மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்குமே தெரியும். ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். கிராமப்புறமாக இருந்தால் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது விதி. தாய்க் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு, 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அந்தக் கடையை அமைக்க வேண்டுமானால், இந்தச் சட்ட விதிகளுக்கு உட்பட்டிருந்தால், நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு துறை ரீதியாக நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

துணை மின் நிலையம்

***39438—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, வீரகநல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, வீரகநல்லூர் ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான

2019 பிப்ரவரி 12]

நிலம் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகின்றது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றபின் உடனடியாகத் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற 60 இலட்சம் குடும்பங்களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வழங்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நாடே போற்றி மகிழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் உள்ள வீரகநல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதியின் சார்பிலே என்னுடைய நன்றிகலந்த பாராட்டுதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேரம் மின்தடை அமலில் இருந்ததை மாற்றி, மின் நிருவாகத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததால், தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உயர்த்திக் காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையால் தமிழகத்தின் தற்போதைய ஒட்டுமொத்த மின் நிறுவு திறன் 30,191 மெகா வாட் அளவிற்கு உயர்ந்துள்ளது, சாதனையின் சிகரமாகும். அந்த வகையிலே, நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதியில் உள்ள வீரகநல்லூர் கிராமத்தில் இந்த ஆண்டே துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகின்றது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடன், கோப்புகள் தலைமைச் செயலகம் வந்து, அனைத்து அமைச்சர்களும் அதனைப் பார்த்து, அந்த நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், அது பாறைப் புறம்போக்கு நிலமாக இருக்கின்றது. அந்த நிலம் கையகப்படுத்தப்பட வேண்டுமென்றால், அரசுக்குக் கோப்புகள் சுற்றனுப்பப்பட வேண்டும். எனினும், கூடிய விரைவில் அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, விரைந்து துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு முதல் 464 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 12,636 கிலோ மீட்டர் நீளமுள்ள மிக உயர் மின்னழுத்தப் பாதைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசின் சாதனைகளாக விளங்குகின்றன. அந்த வகையில், நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் உள்ள வெளிஅகரம், தாழவேடு, மாதூர், கீச்சளம், இராஜாநகரம் மற்றும் ஈஸ்வரகண்டாபுரம் ஆகிய கிராமங்களில் துணை மின் நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் நில உரிமை மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இந்தக் கிராமங்களில் இவ்வாண்டே துணை மின் நிலையம் அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாண்டுக் கால திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 13 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்படவிருக்கின்றன. அதற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதிகளில் ஆய்வு செய்து, ஏற்கெனவே அங்கே இருக்கின்ற துணை மின் நிலையத்தில் மின் பளு அதிகமாக இருக்குமென்று*

2019 பிப்ரவரி 12]

சொன்னால், அந்த 13 துணை மின் நிலையங்களில் தாங்கள் குறிப்பிட்டவற்றையும் எடுத்துக்கொள்வதற்கு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை டெல்டா மாவட்டத்தில் புதிய மின்னிணைப்பு வேண்டி இலவச மின்னிணைப்பும், முன் தொகை, வைப்புத் தொகையைக் கட்டி மின்னிணைப்பு தேவை என்றும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. கடந்த 8 ஆண்டுகளாக, குறிப்பாக 2010–லிருந்து இலவச மின் மோட்டாருக்கு மின்னிணைப்பு இல்லை; வைப்புத் தொகை கட்டியிருக்கின்ற விவசாயிகளும் இதற்காகக் காத்திருக்கின்றார்கள். இது தமிழகம் முழுவதும் இருக்கிற நிலை. மின் மிகை மாநிலம் என்று சொல்கிற இந்த அரசு, டெல்டா மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளில் எவ்வளவு மின் மோட்டார்களுக்கு இணைப்பு தந்திருக்கிறது அல்லது எவ்வளவு தர இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் 2010 ஆம் ஆண்டிற்கு அல்ல, 2001 ஆம் ஆண்டிற்குத்தான் இப்போது இலவச மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, 30,835 மின்னிணைப்புகள் புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 'தட்கல்' முறையில் 10 ஆயிரம் மின்னிணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 'தட்கல்' முறையில் 10 ஆயிரம் மின்னிணைப்புகள் கொடுக்கப்படவிருக்கின்றன.

முற்பகல் 10–25

அதேபோல இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரை, 20,000 மின்னிணைப்புகள் கொடுக்கப்படுகின்றன. டெல்டா

மாவட்டங்களைப் பொறுத்தவரையில் என்ன பிரச்சினை என்று சொன்னால், அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. அங்கே low voltage இருக்கின்றது; நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரையில், துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்வது மிகவும் கடினமாக இருக்கின்றது. அங்கே விளை நிலங்களாக இருக்கின்ற காரணத்தினால் இடம் கொடுக்க மறுத்து வருகின்றார்கள். அதுபோன்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான் காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றது. 'கஜா' புயலின் காரணமாக, 3 மாத காலமாக புதிய மின்னிணைப்புகள் வழங்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், இருக்கின்ற materials எல்லாவற்றையும் நிவாரணப் பணிகளுக்கு நாங்கள் பயன்படுத்திவிட்டோம். இப்பொழுதுதான் புதிதாக materials வந்துகொண்டிருக்கின்றன. இந்த மாதத்திலிருந்து அந்தப் பணியைத் தொடங்குவோம். அப்போது டெல்டா மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

மகப்பேறு மருத்துவமனை

***2748—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 60–வது வட்டத்தில் மகப்பேறு மருத்துவமனையை மீண்டும் அமைக்க அரசு முன்வருமா?